பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 301

புதன்கிழமை
24 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை



## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், செப். 24
யாழ்ப்பாணம் உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 14

## குடலில் கிருமித்தொற்று; குடும்பத்தலைவர் இறப்பு

யாழ்ப்பாணம், செப். 24
திடீர் சுகவீனம் ஏற்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் 14



### முச்சந்தி முரளி

'வெடி கொளுத்திற வெருளிகளுக்கு செக்கென்ன திலீபன்ர ஊர்தியென்ன? எல்லாம் உதுகளுக்கு ஒண்டுதான் கண்டியளோ'

செம்மணி வளைவில்

# சர்வதேசத்திடம் நீதிகோரி உணவுத் தவிர்ப்புப் போர்

## நாளைமுதல் செப்ரெம்பர் 29 வரை ஐந்து தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதிகோரி, நாளைமுதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை சுழற்சிமுறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அறிவித்துள்ளனர். 14

## திலீபனின் ஊர்திக்கு முன்பாக பட்டாசு கொளுத்தியவர் கைது

பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 24
தியாகதீபம் திலீபனின் ஊர்திக்கு முன்பாக பட்டாசு கொளுத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந் தச்சம்பவம் பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்றுள்ளது.
தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, 16

அரச சேவைகளில்

## 70,000 ஊழியர்களை இணைக்க அனுமதி!

விரிவு பக்கம்:- 14

## வாள்வெட்டுச் சூத்திரதாரி கட்டுநாயக்கவில் கைது!

யாழ்ப்பாணம், செப். 24
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வேறு வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலை 14

## போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணையே தேவை

ஐ.நா. பிரதிநிதியிடம் வலியுறுத்து கையொப்பங்களும் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 24
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகச் சர்வதேச விசாரணையே 14

## பிறந்த சில மணிநேரத்தில் இரட்டைச் சிசுக்கள் சாவு!

யாழ்ப்பாணம், செப். 24
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிறந்த இரட்டை சிசுக்கள் சில மணி நேரத்தில் உயிரிழந்துள்ளன.
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 14



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SLS 375




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 4203; ஆங்கில எழுத்து: K; வெற்றி இலக்கங்கள்: 10 36 41 70; விசேட எழுத்து: K

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 1270; வெற்றி இலக்கினம்: சிம்மம்; வெற்றி இலக்கங்கள்: 13 32 48 50

**NLB ஜய** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0229; ஆங்கில எழுத்து: R; வெற்றி இலக்கங்கள்: 0 3 1 8

**மெகா பவர்** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 2309; ஆங்கில எழுத்து: Y; சுப்பர் இலக்கம்: 13; வெற்றி இலக்கங்கள்: 13 21 46 71

**மஹஜன சம்பத** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 5961; ஆங்கில எழுத்து: G; வெற்றி இலக்கங்கள்: 1 8 8 8 2 6

**தன நிதானய** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 1991; ஆங்கில எழுத்து: T; வெற்றி இலக்கங்கள்: 05 27 51 60; விசேட எழுத்து: T

**அத சம்பத** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0536; ஆங்கில எழுத்து: G; வெற்றி இலக்கங்கள்: 8 8 2 6

**சுப தவசக்** — திகதி: 23.09.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0077; வெற்றி இலக்கினம்: துலாம்; வெற்றி இலக்கங்கள்: 07 23 39 47

# போதைப்பொருள்கள் தொடர்பான தகவல்கள் தந்தால் பணப்பரிசு!



**கொழும்பு,செப்.24**

**போதைப்பொருள்கள் தொடர்பான தகவல்களை வழங்குவோருக்குப் பணப்பரிசு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

தங்காலைப் பிரதேசத்தில் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்ட இடத்துக்குச் சென்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு 600 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள்களும் 5 துப்பாக்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவையே ஒரே நாளில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள்கள்.

மக்களிடமிருந்து இப்போது போதைப்பொருள் தொடர்பாக அதிக தகவல்கள் எங்களுக்குக் கிடைத்து வருகின்றன. தினமும் நாடு முழுவதும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டால், அவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்துமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். அதற்கேற்ப தேவையான சட்டக் கட்டமைப்பையும், தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான சூழலையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

பொலிஸார் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அது குறித்த தகவல்களை 1997 மற்றும் 0718598888 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்குத் தெரிவிக்கலாம். அவற்றின் இரகசியத்தன்மை முழுமையாகப் பாதுகாக்கப்படும் - என்றார். (க-இ)

**சுபிரி தன சம்பத** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; வெற்றி வாரம்: 0669; ஆங்கில எழுத்து: E; வெற்றி இலக்கம்: 3 8 6 0 9 1

**Super Ball** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; சீட்டிழுப்பு வாரம்: 2935; ஆங்கில எழுத்து: D; வெற்றி இலக்கம்: 33 67 75 80

**சனிதா** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: A; வெற்றி இலக்கம்: 13 34 62 76; வெற்றி வாரம்: 5096

**SASIRI** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; வெற்றி வாரம்: 0776; வெற்றி இலக்கம்: 22 44 48

**லக்ன ராசி** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; மகரம்; வெற்றி இலக்கம்: 03 04 09 41; சீட்டிழுப்பு வாரம்: 4647

**KAPRUKA** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: B; சுப்பர் இலக்கம்: 36; வெற்றி இலக்கம்: 05 23 37 61; வெற்றி வாரம்: 2111

**அத கோடிபதி** — திகதி: 23.09.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: N; வெற்றி இலக்கம்: 05 11 12 49; வெற்றி வாரம்: 2761

# எதிர்க்கட்சிகள் இணைவால் அரசாங்கம் கடும் அச்சமாம்

*தயாசிறி ஜயசேகர கூறுகிறார்*

கொழும்பு, செப்.24

ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்தில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்தமையைக் கண்டு அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டத்துக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் அந்தப் போர்வையில் எமது குரலை ஒடுக்கமுயன்றால் அதற்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எம்முள் இருந்தால் அவர்களையும் கைது செய்யுங்கள். அவர்களுக்கெதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கள்வர்களை கைது செய்வதாகக் கூறி எதிர்க்கட்சிகளின் குரலை முடக்குவதற்கு முயற்சிப்பதை ஏற்கமுடியாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம். அவர் நீதிமன்றத்தைப் புறக்கணிக்கக் கூடியவராக இருந்தால் அவரைக் கைது செய்யலாம். ஆனால் அவர் அவ்வாறு செயற்படவில்லை. சகல விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார். எந்தவொரு அடிப்படையும் இன்றியே அவர் கைது செய்யப்பட்டார்.

ஊழல் ஒழிப்பு என்ற போர்வையில் எதிர்க்கட்சியினரை முடக்க முயற்சித்தால் அதற்கெதிராக நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

நாடு என்ற ரீதியில் அரசியலில் ஈடுபடும் உரிமை எமக்கிருக்கிறது. அந்த உரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் - என்றார். (எ-இ)



# ஒன்லைன் கொள்வனவு இலங்கையர் அவதானம்

யாழ்ப்பாணம்,செப்.24

ஒன்லைனில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் மக்கள் ஏமாற்றப்படும் நிலையில் கவனமாக இருக்குமாறு நுகர்வோர் விவகார ஆணையகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறது. விசேடமாக சமூக ஊடகங்கள் மூலம் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பொருள்களுக்கு விண்ணப்பம் செய்வதற்கு முன் விற்பனையாளரின் முகவரி, தொடர்புத் தகவல் மற்றும் வாடிக்கையாளர் மதிப்புரைகளைச் சரிபார்க்கவேண்டும்.

அத்துடன் போலி மதிப்புரைகள் குறித்தும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அதிகாரசபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ச)

# மருத்துவராக நடித்தவர் 20 வருடங்களின் பின் கைது

கொழும்பு,செப்.24

சுமார் 20 வருடங்களாக 02 தசாப்தங்களாக மருத்துவராக ஏமாற்றி வந்தார் எனக் கூறப்படும் 54 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். வாத்துவை, தெல்துவை பகுதியைச் சேர்ந்த வேறொருவருக்குச் சொந்தமான இலங்கை மருத்துவ சபைப் பதிவு இலக்கத்தைப் பயன்படுத்தி அவர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தமை தெரியவந்துள்ளது. அத்துடன் அங்கு உரிமம் பெறாத மருந்துகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-இ)

# பருத்தித்துறையில் தியாக தீபத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,செப்.24

தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் பருத்தித்துறையிலுள்ள அவரது நினைவிடத்தில் வடமராட்சி மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பொது ஈகைச்சுடரினை மாவீரர் லெப்டினென்ட் தென்றலின் சகோதரரும், ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவருமான சி.வேந்தன் ஏற்றிவைக்க மலர் மாலையை பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ டக்ளஸ் போல் அணிவித்ததார். தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பு பிரதிநிதி க.தவராசா அஞ்சலியை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து அனைவரும் அஞ்சலி செலுத்தினர். (ச-27,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வாகனங்கள் பழுதுபார்ப்பு ஓராண்டில் 640 மில். செலவு

தேசிய கணக்காய்வில் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு,செப்.24**
**கடந்த ஓர் ஆண்டில் ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக 640 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.**

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி, திவயின நாளிதழ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி இந்தப் பழுதுபார்ப்புகளுக்காக மொத்தம் 645, 336,744 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 53 வாகனங்கள் 10 முதல் 17 தடவைகள்வரை மீண்டும் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.
ஒரு வாகனம் பழுதுபார்க்க ஒரு மில்லியன் ரூபாய் முதல் 28 மில்லியன் ரூபா வரை செலவழிக்கப்பட்டுள்ளது.
1 மில்லியன் முதல் 40 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மொத்தமாக 189 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. இதனூடான அரசின் நிதி நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளும், பொது நிதியை வீணாகச் செலவிடும் போக்கும் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## மின்சாரசபை ஊழியர்கள் விடுமுறைகள் இரத்து

கொழும்பு,செப்.24
இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் இரத்து செய்யப்பட்டுள்ளது.
உடன் நடைமுறைக்குவரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மறுஅறிவித்தல்வரை அவர்களது விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அதன் பொதுமுகாமையாளர் எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளார். (ச-இ)

## ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு இரு ஆண்டுகள் சிறை!

கொழும்பு,செப்.24
நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை உயர்நீதிமன்றம் விதித்துள்ளது.
நீதிபதியரசர்களான ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோரின் ஒப்புதலுடன், உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச-இ)

## டிப்பர் விபத்து சிறுவன் பலி

அம்பாறை,செப்.24
அம்பாறை கல்முனையில் டிப்பரொன்று வீதியின் ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் மற்றும் சிறுவன் மீது மோதியதில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.
இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
உஹன பகுதியைச் சேர்ந்த 4 வயதான சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகள் அம்பாறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ச-இ)

## இலங்கை நடிகர் நளின் மறைவு!



கொழும்பு,செப்.24
இலங்கையின் பிரபல தொலைக்காட்சி நடிகரான நளின் பிரதீப் உடுவெல புற்றுநோய் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை தனது 56ஆவது வயதில் காலமானார்.
தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களில் நடித்து, தனது தனித்துவமான நடிப்புத் திறமையின் மூலம் நளின் பிரதீப் உடுவெல, ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தவர்.
நளின் பிரதீப் உடுவெலவின் மறைவுக்கு இலங்கைக் கலைத்துறையினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)

## பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தில் நடைபாதையில் வியாபாரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம்,செப்.24
பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள, நவீனசந்தைக் கட்டடத்தொகுதியில் நடைபாதையை ஆக்கிரமித்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சன் டி போல் டக்ளஸ் போல், சந்தைக்கு நேரடியாகச் சென்று, அங்குள்ள வியாபாரிகளுடன் கலந்துரையாடினார்.
நடைபாதையை ஆக்கிரமித்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால், பொதுமக்கள் மழை, வெய்யில் என்றும் பாராது நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு வெளிப்பகுதியினூடாகவே சென்று வருகின்றனர். எனவே நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி, சட்டரீதியாக வழங்கப்பட்ட இடத்துக்குள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.
இதற்கு முன்னரும் நடைபாதை எல்லையை வரையறுக்கும் வகையில் கோடு வரைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், இது வரை நடைமுறைப்படுத்தப்படாதுள்ளது.
இந்தநிலையில் நகருக்கு வருகை தரும் பொது மக்கள் எவ்வித இடையூறும் இன்றி நவீன சந்தைக் கட்டடத்தொகுதியைப் பயன்படுத்த [illegible] (க-[illegible])




## போட்டியும் கலகமும் - 1

கலகம் நடந்தால்தான் நீதி பிறக்கும் எண்டு சொல்லுவினம். ரண்டு பள்ளிக்கூடங்களுக்கு இடையில நடந்த ஒரு வழக்கும் ஒரு தெளிவைக் குடுத்திருக்கு. தமிழ்த்தினப் போட்டியள் எண்டாலே இஞ்சத்தைப் பள்ளிக்கூடங்கள் அது ஏதோ ஒலிம்பிக் போட்டி மாதிரி 'நீயா. நானா?'எண்டு கடுமையாப் போட்டி போடுவினம். பிள்ளையளின்ர ஆளுமையளை வெளிக்கொண்டு வாறதுக்குத்தான் இந்தத் தமிழ்த் தினப்போட்டியளை வைக்கிறவை. சின்னப் பிள்ளையளுக்கு உதவிப்பணம் குடுக்கவும், ஆறாம் ஆண்டில அடுத்த பள்ளிக்கூட அனுமதியைக் குடுக்கவும் நடத்திற ஸ்கொலர்ஷிப் எக்ஸாமை எங்கடையாக்கள் தங்கட கௌரவப் பிரச்சினையா எடுத்து 'அம்மாமாரின்ர எக்ஸாம்' எண்டு மாத்திட்டினமெல்லோ. அதைமாதிரித்தான் இப்ப தமிழ்த்தினப் போட்டியளையும் பிள்ளையளின்ர திறமையை வெளிக்கொண்டு வாறதை விடவும், பள்ளிக்கூடங்களின்ர கௌரவத்தைக் காப்பாத்துற சண்டைக்களமா சிலர் மாத்திட்டினம். அதின்ர ஒரு வெளிப்பாடுதான் இந்த வழக்கு. எல்லாரும் பேஸ்புக்கில விசயங்களையும்,தீர்ப்பையும் அரைகுறையாச் சொல்லி , கல்வித் திணைக்களத்தையும் கேவலப்படுத்துகினம். ஆனால் உண்மை வேற.

தமிழ்த்தினப்போட்டி எண்டாலே ஒவ்வொரு பள்ளிக்கூடமும் தனக்குப் போட்டியா வாற பள்ளிக்கூடங்களில எந்த முட்டையில என்ன மயிர்பிடுங்கலாம் எண்டுதான் பாத்துக்கொண்டிருப்பினம். தமிழ்த் தினப்போட்டியள் எப்பிடி நடக்கிறதெண்டும் உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு வருசமும் என்னென்ன ரூல்ஸ் எண்டு சுற்றுநிருபம் வரும், அதுக்கேத்தபடி ஒவ்வொரு பள்ளிக்கூடமும் போட்டியளில பங்குபற்றும். கோட்டம், வலயம், மாகாணம் எண்டு ஒவ்வொரு மட்டத்திலையும் முதலாவதா வாற பள்ளிக்கூடங்கள் தேசிய மட்டத்துக்கு போவினம். அப்பிடி குழு இசைப் போட்டியில வடமராட்சியில இருந்து ஒரு பள்ளிக்கூடத்துக்கும், யாழ்ப்பாணத்தில இருந்து ஒரு பள்ளிக்கூடத்துக்கும் இடையிலதான் கடும்போட்டி. அந்தப் போட்டிக்கு அஞ்சுபேர் நடுவரா இருந்தவை. எல்லாரும் மியூசிக்கில கெட்டிக்காரர். அந்த அஞ்சுபேரும் போட்டியைப் பார்த்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் மார்க்ஸ் போட்டு குடுக்க, பிறகு அதை அவைக்குப் பொறுப்பாக இருக்கிறவை கூட்டிப் பார்த்து, திரும்ப நடுவர்மாரிட்ட காட்டி, அவையும் சரி எண்டு திருப்திப்பட்டு 'சைன்' வைச்ச பிறகுதான் முடிவை அறிவிப்பினம். அப்பிடித்தான் இந்தப் போட்டியிலையும் முடிவை அறிவிச்சவை.

ஆனால் போட்டி முடிவு அறிவிக்க முதலே யாழ்ப்பாணப் பள்ளிக்கூடக்காரர், ஒரு முறைப்பாடு செய்திருக்கினம். 'வடமராட்சிப் பள்ளிக்கூடக்காரர் படிச்ச ஒரு பாட்டில (பதவர்ணத்தில) சாகித்தியம் இல்லை' எண்டதுதான் அந்த முறைப்பாடு. அதால முடிவு வந்தவுடன பிழையான முடிவு எண்டு அவை சொன்னதால,போட்டிக்குப் பொறுப்பான அதிகாரிமார் அதைப்பற்றி நடுவர்மாரிட்டையும், வெளியால உள்ள சங்கீத வித்துவான்களிட்டையும் 'வடமராட்சிப் பள்ளிக்கூடம் படிச்ச பாட்டில சாகித்தியம் இருக்கா, இல்லையா?' எண்டு விசாரிச்சிருக்கினம். எல்லாருமே 'அதில சாகித்தியம் இருக்கு' எண்டு சொல்ல, கல்வித்திணைக்களக்காரரும் 'முடிவில மாற்றமில்லை' எண்டு திரும்ப அறிவிச்சிட்டினம். அதுக்குப் பிறகுதான் இந்தப் பிரச்சினை பத்தியெரிய வெளிக்கிட்டிருக்குது.அதைப் பற்றி நாளைக்குப் பாப்பம்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 20.02.1956



மறைவு 21.09.2025

### நல்லையா குலராசா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டைபறித்தான் வீதி, கொடிகாமம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா குலராசா அவர்கள் கடந்த 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை சந்நிதி முருகன் திருப்பாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்புநாதபிள்ளை - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், குலறஞ்சிதம், நவராசா (கனடா), ரவிராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் கலைவாணி, புஸ்பராணி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற சிவராசா மற்றும் அற்புதராணி (மதிப்பீட்டாளர், வடபிராந்திய மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரி (கனடா), கலாமோகினி (கனடா) ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும், சுதர்சினி, சுபாசினி, சுதாகரன் (லண்டன்), சுபாகரன் (பிரான்ஸ்), சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்), சுஜிகரன் (சுகந்தன்), சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன், செல்வகுமார் (விநாயகர் அச்சகம், வவுனியா), டயானா (பிரான்ஸ்), குருசாத் (சாரதி, கிளிநொச்சி மாவட்ட செயலகம்), விபுசா, சசீலா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ஸ்ரீமயூரன் (கனடா), சிவச்சந்திரன், தனுஷன், சரணியா ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், பானுஷா, கஜிதா, அனுஷா, சுஜிர்தா, பாமிலா, அஜந்தன், டிலன், றஜிந்தன், தனுஷன் ஆகியோரின் பெரியதந்தையும், கிதுஷனா- தனுசிகன் (லண்டன்), பிரவிந் (கனடா), பவிநயா, லதுர்சன், மிதுர்னா, ஜெனலிகா, ஜென்சிகா, ஜெசிக்கா, வினித், விகான், கிஷான், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2025) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைபறித்தான் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கட்டைப்பறித்தான் வீதி,
கொடிகாமம் வடக்கு,
கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் - 077 7177 445

(CR 46324) A

## மரண அறிவித்தல்



### திருமதி ஹரியெற்றா மங்களதாஸ் (சறோ Teacher)

(முன்னாள் ஆசிரியை கார்மேல் பாலர் பாடசாலை)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹரியெற்றா மங்களதாஸ் (சறோ) அவர்கள் நேற்று (23.09.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சொர்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் - திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மங்களதாஸ் (ஓய்வு நிலை குழாய் பொருத்துநர் யாழ் மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும், றஜிதா (ஆசிரியை - யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), நேருஷா (ஆசிரியை - யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்) மற்றும் காலஞ்சென்ற குயிலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சர்வேஸ்வரன் (Business), லியோன் (Business) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிலோமினா (பிறேமா) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாலேந்திரன், மேரி கொண்செப்ரா, கிறிஸ்ரி அன்ரனிதாஸ், மேரி எட்மன்ரா மற்றும் குணேந்திரன், விமலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், பபிதா பாபு (மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்) அவர்களின் பாசமிகு சித்தியும், கார்த்திகன் (யாழ் புனித பத்திரிசிரியார் கல்லூரி), மரிய யோஷிதா, சுபேனா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.09.2025) புதன்கிழமை மாலை 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு யாழ் புனித திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

19/1 மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 691 6193
077 323 7415

## மரண அறிவித்தல்



### வேலாயுதம் தெய்வேந்திரன்

(உரிமையாளர் - ஜெயா வைண்டிங் வேக்ஸ், யாழ்ப்பாணம், ஜெயா பில்டிங், அரியாலை, யாழ்ப்பாணம், கொழும்பு)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தெய்வேந்திரன் அவர்கள் கடந்த (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராசாத்தி - துரைராசா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, பூரணச்சந்திரன், கோவிந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், டயஸ் (இத்தாலி), சுகிர்தா (லண்டன்), காலஞ்சென்ற சதீஸ் (லண்டன்) மற்றும் நகுலா (சுவிஸ்), டஜித்தா (ஆஷா- லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷ்யந்தி, செல்வமேனன், சத்தியராஜா ஆகியோரின் அன்பு மாமனும், ஜிரோமி, டிலோன், திஷாணா, அபிணா, ஜஸ்வன், விஷ்வஜித், வர்ஷா, அஷ்னா, ஜெய்ஷன், ஜெய்டன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள ஜெயா வைண்டிங் வேக்ஸ் நிறுவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மண்ணில் 25.11.1949 | விண்ணில் 21.09.2025

670, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 643 0681

(CS/59469) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

கடமையைச் செய்பவனுக்குக் கடமை இருந்து கொண்டே இருக்கும்; கவலைப்படுகிறவனுக்கு கவலை இருந்து கொண்டே இருக்கும்.

-கண்ணதாசன்-

## போதைக்கு எப்போது முற்றுப்புள்ளி?

இலங்கையில் அண்மைய நாள்களில் பாதாள உலகக் குழுக்களைச்சேர்ந்த பெரும்புள்ளிகள் கைதுசெய்யப்படுதல், பெருந்தொகைப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன. நேற்றுமுன்தினமும் தங்காலைப் பிரதேசத்தில் பெருந்தொகைப் போதைப்பொருள்களும் கூடவே இரு சடலங்களும் மீட்கப்பட்ட செய்தி இலங்கை முழுதும் பெரும் பரபரப்பை உண்டாக்கியுள்ளது. நாட்டில் கண்டுபிடிக்கப்படும் போதைப்பொருள் உற்பத்தி நிலையங்களும், பெருந்தொகைப் போதைப்பொருள்களும் கடந்தகாலங்களில் எந்தளவு சுதந்திரமாகப் போதைப்பொருள் வர்த்தகம் நாட்டுக்குள் நடந்திருக்கின்றது என்ற அதிர்ச்சியான உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றன.

கடந்த இரு தசாப்தகாலமாக உலக போதைப்பொருள் வர்த்தகத்தின் கேந்திரநிலையமாகக் கருதுமளவுக்கு இலங்கையில் போதைப்பொருள் பரவலடைந்திருந்தது. போதைப்பொருள் வர்த்தகத்தை - பாவனையைக் கட்டுப்படுத்த கடந்தகால அரசாங்கங்கள் எடுத்திருந்த நடவடிக்கைகள் பயனற்றவையாகவே காணப்பட்டன. பாதாள உலகக் குழுக்களுடனும், போதைப்பொருள் வர்த்தர்களுடனும் உயர் அரசியல் மட்டங்கள் கொண்டிருந்த தொடர்பே அதற்குப் பிரதான காரணமாகவிருந்தது. தங்களின் அரசியல் நோக்கங்களுக்காக அரசியல் உயர்மட்டங்கள் பாதாள உலகக் குழுக்களைப் பயன்படுத்தியதால், அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் அல்லது அவற்றின் இலாபங்களைப் பங்கிட்டுக் 'கமுக்கமாகக்' கடந்துசெல்லும் போக்கே நாட்டில் போதைப்பொருள் அகலக் கால்பரப்பி வேரூன்றுவதற்குப் பிரதான காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக, பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள், அரசியலுக்கு அப்பால் வரவேற்கக் கூடியவையே. வெளிநாடுகளில் பதுங்கியிருந்து இதுவரை காலமும் நாட்டுக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை அரங்கேற்றிய பாதாள உலகக்குழுக்களின் முக்கியமான உறுப்பினர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டமை, போதைப்பொருள் ஒழிப்பு முயற்சியின் ஒரு முக்கியமான மைல்கல் என்றே கருதலாம். அதேபோன்று நாட்டில் கண்டுபிடிக்கப்படும் பெருந்தொகைப் போதைப்பொருள்கள் இதுவரைகாலமும் போதைப்பொருள் வியாபாரிகளுக்குக் கிடைத்துவந்த அரசியல் பக்கபலம் இல்லாது போயிருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது. இது நிச்சயம் பாராட்டப்படவேண்டிய ஒன்றே.

அதேநேரம், தெற்கில் இந்த விடயத்தில் காட்டப்படும் அதேயளவு தீவிரம் வடக்கிலும் காட்டப்பட வேண்டும். வடக்கில் என்றுமில்லாதவகையில் இப்போது போதைப்பொருள்கள் கையாளப்படும் நிலையில், போதைப்பொருள் வர்த்தகத்தின் சூத்திரதாரிகள் எவரையும் இதுவரை பொலிஸார் நெருங்கவில்லை. இதுவே வடக்கில் தொடர்ந்தும் போதைப்பொருள் வியாபாரம் கொடிகட்டிப் பறக்க வழியேற்படுத்தியிருக்கின்றது. வடக்கிலும் ஹெரோய்ன், ஐஸ் போன்ற போதைப்பொருள்கள் மலிந்துள்ள நிலையில், அவற்றின் மூலவேர்களைக் கண்டறிந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டியதும் அவசியம்.

நாட்டின் அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதாரத்துடன் முடிந்துவிடுவதில்லை. நாட்டில் பலம்வாய்ந்த வேலைப்படை -இளைய சமூகத்தினர் உருவாக்கப்படுவதும் நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானது. நாட்டில் ஊடுருவியிருக்கும் போதைப்பொருள் எம் இளைய தலைமுறையின் செயற்றிணை முற்றாக அழித்துவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகையால் எல்லாவற்றையும் விடவும் போதைப்பொருள் கலாசாரத்தை நாட்டில் இருந்து துடைத்தெறிய வேண்டியதும் அனைவரினதும் மிகப்பெரும் பொறுப்பு- அதை எவரும் தட்டிக்கழித்துவிடமுடியாது. நாட்டின் எதிர்காலத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய குற்றக்கும்பல்கள், அரசியல் புள்ளிகள் அனைவரும் மிக விரைவாக சட்டத்தின் முன்நிறுத்தப்படுவதில் எவ்விதமான பாகுபாடும் இன்றி நிறுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இழப்பீடு வழங்க மறுப்பு



கொழும்பு,செப்.24

**இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றுதலுக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்கான இழப்பீட்டை வழங்குவதற்கு அந்தக் கப்பல் நிறுவனம் மறுத்துள்ளது.**

2021 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் பயணித்த போது சிங்கப்பூருக்குச் சொந்தமான கப்பல் தீப்பற்றுதலுக்கு உள்ளானது. இதனால் நாட்டின் கடல்வளம் பெருமளவில் மாசடைந்ததுடன், கடல் வாழ் உயிரினங்களும் இறந்து கரையொதுங்கியிருந்தன. இந்தநிலையில் அதற்குரிய இழப்பீடாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்தவேண்டும் என அந்தக் கப்பலின் நிறுவனமான சிங்கப்பூ நிறுவனத்துக்கு இலங்கை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனினும் அந்த இழப்பீட்டைச் செலுத்துவதற்கு குறித்த நிறுவனம் மறுப்பு வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-இ)

## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு,செப்.24

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 1.5 வீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, பணவீக்கம் 0.7 வீதமாகக் காணப்பட்ட நிலையில், ஓகஸ்ட் மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதேவேளை உணவுப் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 2.2 வீதமாகக் காணப்பட்ட நிலையில், ஓகஸ்ட் மாதத்தில் 2.9 வீதமாக அதிகரித்துள்ளது. உணவு அல்லா பணவீக்கம் ஜூலையில் 0.6 வீதமாக காணப்பட்ட நிலையில், கடந்த மாதம் 0.4 வீதமாக ஆக குறைந்துள்ளது. (ச-இ)




## போலி நாணயத்தாள் இளைஞர் கைது

கொழும்பு,செப்.24

அநுராதபுரம் - ஹபரணைப் பிரதேசத்தில் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் இளைஞர் ஒருவர் ஹபரணைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹபரணைப் பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த இளைஞர் போலி நாணயத்தாள் ஒன்றை மாற்ற முயன்றபோதே அவர் சிக்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபரான இளைஞரைக் கைது செய்துள்ளனர். (ச-இ)



## பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,செப்.24

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரகேவின் பிணை மனுவை நிராகரித்த கம்பஹா உயர் நீதிமன்றம், அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. போலிப் பத்திரங்களைத் தயாரித்து அரசுக்குச் சொந்தமான நிலத்தை விற்பனை செய்தார் என பிரசன்ன ரணவீர மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்!

கொழும்பு,செப்.24

நான்கு அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றதை அடுத்து பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

நாளை

வியாழக்கிழமை - புரட்டாதி 9


25.09.2025

சுபநேரம் : 07.32 - 09.02

ராகுகாலம் : 01.32 - 03.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கணேசையா சச்சிதானந்தசிவம்

வீமன்காமம் தெல்லிப்பளையில் பிறந்தவரும் Grotenbach Str 78, 44225 Dortmund, Germany யை வதிவிடமாகவும் கொண்டிருந்த கணேசையா சச்சிதானந்தசிவம் அவர்கள் கடந்த (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை யாழில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி - கணேசையா தம்பதியரின் மகனும், வனிதாதேவியின் அன்புக் கணவரும், இராசரத்தினம் (சாம்பு), கமலாகரன் ஆகியோரின் சகோதரனும், தாரணி, கெஸ்டன் பெர்னான்டோவின் அப்பாவும், துர்க்கா, பகீரதன், யாழினி, ஜதுர்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் பெரியதந்தையும், கருணேஸ்வரி இராசரத்தினம், சுசிலாதேவி, கமலாகரன், பொன்னையா சத்தியமூர்த்தி, புண்ணியமூர்த்தி, கருணாகரமூர்த்தி, வசந்தாதேவி ஜீவானந்தம், சரோஜினிதேவி கோபால கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும், அஸ்மிதா, அக்ஷராவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2025) வியாழக்கிழமை யாழ் ஆஸ்பத்திரி வீதி, 874ம் இலக்கத்திலுள்ள (U.S Hotel எதிரில்) அஞ்சலிக்கூடத்தில் முற்பகல் 11.00 - 13.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(CS/59470) J-1

தோற்றம் 17.09.1948 — மறைவு 21.09.2025

மேலதிக தொடர்புகளுக்கு:
பொ.கருணாகரமூர்த்தி : 070 270 5910
ச.ரங்கநாதன் : 077 916 8139

தகவல்:
குடும்பத்தினர்

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கார்த்தி சுப்பிரமணியம்

திதி: திரிதியை (24.09.2025)

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஒன்பது ஆண்டுகள் மறைந்தாலும் எங்களை வளர்த்து மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டிய அன்புத் தந்தையை எம்நினைவில் மறவாமல் வைத்திருப்போம்.

தோற்றம் 26.05.1932 — மறைவு 04.10.2016

குடும்பத்தினர்

(CR/46325) J-1

**தேவை**

- Bottle Cooler (பெரிய அளவிலான இரண்டு கதவுடைய)
- Hero Honda 100CC Motor Bike (ஆண்களுக்காக)

தேவை

077 077 4090

(CS/59471) J-1

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,செப்.24

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நேற்று முன்தினம் தொடக்கம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தினமும் இரவு 7 மணிக்கு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நவராத்தி பாமாலை பாடப் படும். (சு-17)

தியாக தீபம் நினைவு


## யாழ்.பல்கலையில் குருதிக்கொடை

தமிழர் தாயகம் எங்கும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரமானது உணர்வு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் 'உயிர் கொடுத்த உத்த மனுக்காய் உதிரம் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தால் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இரத்ததான முகாம் இன்று புதன்கிழமை மு.ப 9.00 மணி தொடக்கம்பி.ப 3.00 மணிவரை முன்னெடுக்கப் படவுள்ளது. (ச-27)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம்,செப்.24

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மீசாலையில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறும் என கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.நிமலறூபன் அறிவித்துள்ளார். (ச-9)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையில் மீசாலை பொது நூலகத்தில் கடந்த சனிக்கிழமை போட்டிகள் நடத்தப்பட்டன. (எ-25,9)

## கீரைப்பிடி 200 ரூபா

யாழ்ப்பாணம், செப்.24

மழை காரணமாக கீரைச் செய்கை அழிவடைந்துள்ளதால், சந்தைகளில் கீரைப்பிடியின் விலை 200 ரூபாவைக் கடந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் கடந்தவாரம் பெய்த மழை காரணமாக கீரைச் செய்கை அழிவடைந்துள்ளது. அறுவடைக்குத் தயாராக இருந்த கீரை வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதனால் சந்தைகளில் கீரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், கீரைப்பிடி ஒன்றின் விலை 200 ரூபாவைக் கடந்துள்ளது. (சு-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றல் கடிதம் வழங்கியும் கடமையேற்காத ஆசிரியர்கள்

## உடன் நடைமுறைப்படுத்துமாறு வடக்கு கல்வியமைச்சின் செயலாளர் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

**யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான, விடுவிப்புக்கடிதம் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்பட்ட பின்னரும், ஒரு சில அதிபர்கள் அந்த ஆசிரியர்களைத் தமது பாடசாலைகளில் கையெழுத்திடுவதற்குத் தொடர்ந்தும் அனுமதிக்கின்றனர். இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பணிப்புரை விடுத்துள்ளார்.**

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின்கீழ், இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தெரிவிக்கையில்,

நிர்வாக நடைமுறைகளை ஒழுங்காக அனைவரும் பின்பற்றவேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர்களால் விடுவிக்கப்பட்ட பின்னரும், புதிய நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படவேண்டும். அதே போன்று அதிபர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆசிரிய ஆளணிச் சீராக்கத்தையும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் செய்யவேண்டும்.

இந்த விடயத்தில் நானே நேரடியாக பாடசாலைகளுக்குச் சென்று கள ஆய்வை முன்னெடுப்பேன்- என்றார். கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம், கலாசார அலுவல்கள் பிரிவு, விளையாட்டுத் திணைக்களம் என ஒவ்வொரு திணைக்களத்தினதும் முன்னேற்றம் தொர்பாக விரிவாக ஆராயப்பட்டது. திட்டங்களின் தாமதம் அதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுத் தீர்வுகளும் பரிந்துரைக்கப்பட்டன. (க-66)

# பனை விதைகள் நடுகையும் உபகரணங்கள் கையளிப்பும்

கொழும்பு,செப்.24

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பனைவிதை நடுகைத் திட்டத்தின் ஆரம்பமும் பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் தலைமையில் கைதடியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.பவானந்தராஜா, பனை அபிவிருத்தி சபைத் தலைவர் ஆர்.ரவீந்திரன், பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள், பனை அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கருவி மாற்றுத்திறனாளிகள் வளநிலையம், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மட்ட உற்பத்திக் குழு, கற்சிலைமடு உழைக்கும் மகளிர் குழு, பளை பனைதென்னை வளக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்குத் தலா நான்கரை லட்சம் ரூபா பெறுமதியான மொத்தமாக 18 லட்சம் ரூபா பெறுமதியான நான்கு பனங்களிசார் உற்பத்திக்கான உபகரணங்களும், ஐந்து பயனாளிகளுக்கான தலா இரு பதாயிரம் ரூபா பெறுமதியான பனங்கிழங்கு உற்பத்திக்கான உபகரணங்களும்வழங்கிவைக்கப்பட்டன. (ச-20,66)

# நோயாளர்கள் மேம்பாட்டுப் போட்டி மன்னார் மருத்துவமனை முதலிடம்

மன்னார், செப்.24

சுகாதார அமைச்சினால் உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் மருத்துவமனைகளுக்கிடையில் நடத்தப்பட்ட நோயாளர் பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்றிட்டங்களுக்கான போட்டியில் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அதற்கான விருதும் சான்றிதமும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸவால் மன்னார் மாவட்டப் பொதுமருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் கலாநிதி அஸாத் எம் ஹனிபாவிடம் வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தை வத்துப்பிட்டிவல ஆதாரமருத்தவமனையும், மூன்றாம் இடத்தை உடுகம ஆதாரமருத்துவமனையும் பெற்றுள்ளன. (ச-25, 60)





யாழ்.இந்துக் கல்லூரி சாரணர் துருப்பினால் 3ஆவது வருடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த வியாழக்கிழமை கல்லூரியில் இடம்பெற்றது. இதனைச் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் மருத்துவர் பாலித மகிபால ஆரம்பித்துவைத்தார். (ச-41-555)



தென்மராட்சிப் பிரதேச அரசு அலுவலகங்களில் நவராத்திரி விழாவுக்கான கும்பம் வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-25, 9)

# குடிதண்ணீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.24

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் யாழ்.வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான புதிய குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், குடிநீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட தொகுதியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். குறித்த பாடசாலை மாணவர்கள் இதுவரை காலமும் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2025 - CPM இன் முகாமைத்துவ தலைமைத்துவத் துக்கான அதிசிறந்த விருது 4 விருதுகளை தனதாக்கி கொண்டார் கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு. எஸ். சி. வீரசேகர

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிறுவனத்தினால் (CPM) முகாமைத்துவ தலைமைத்துவத்துக்கான அதிசிறந்த விருதுகளில் 4 விருதுகளை. கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரியான திரு. எஸ். சி. வீரசேகர தனதாக்கிக் கொண்டார்.

திரு. எஸ். சி. வீரசேகர கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் எஸ்-லோன். பி ஈ ப்ளஸ் மற்றும் கெவில்டன் ஆகிய வணிக நிறுவனங்களை முகாமைத்துவம் செய்து வருகிறார்.

இந்த விருது வழங்கும் நிகழ்வு செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் நிர்வாகப் பணிப்பாளர் பிரிவுக்கான தங்க விருதினை கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி எஸ். சி. வீரசேகர பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன். திரு. எஸ். சி. வீரசேகரவுக்கு பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுக்கான விருது. நிலைபேண்தகு தன்மை மற்றும் சுழற்சி பொருளாதாரத்துக்கான விருது மற்றும் அதிசிறந்த தலைமைத்துவ திறனுக்கான விருது என மேலும் மூன்று விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுக்கான விருது மர நடுகை திட்டத்தினமான "துரு கபகரு" (Thuru Kepakaru) உட்பட குழாய் பொருத்துநர் மற்றும் மின்சாரப் பணியாளர் கழகங்கள் மற்றும் ஏனைய சமூக செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்துக்கான விருதுகள் பின்வரும் மதிப்பீட்டு அளவுகோல்களுக்கு அமைய வழங்கப்பட்டுள்ளன.

**1. தொலைநோக்கு தலைமைத்துவத்தை வெளிப்படுத்துதல்**
**2. புதுமை மற்றும் படைப்பாற்றலை உந்துதல்**
**3. சமூக சேவை நோக்குநிலை அல்லது நிறுவனப் பொறுப்பை வெளிப்படுத்தல்**
**4. வர்த்தக நாம கட்டமைப்பில் ஈடுபடுதல் மற்றும் சந்தைப் படுத்தல் அல்லது வணிகத்தில் அதிசிறந்த தரத்தை அடைதல்**
**5. பல்வகைப்படுத்தல் மற்றும் வளர்ச்சி உத்தியை செயல் படுத்துதல்**
**6. முன்மாதிரியான முகாமைமைத்துவ திறன்களை வெளிப் படுத்துதல்**
**7. ஊக்கமளிக்கும் மூலோபாய தலைமைத்துவம் மற்றும் மூலதனமாக்கல் போக்கு**

கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழும பணிப்பாளரும் தலைமை செயல்பாட்டு அதிகாரியுமான திரு. எஸ். சி. வீரசேகர விருது பெற்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்.

" என்னுடைய அனுபவத்தில் பொருளாதார நெருக்கடி. கொவிட் 19 மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்றவற்றால் விற்பனையில் பல கடினமான காலங்களை கடந்து சென்று கொண்டிருக்கிறோம். நாங்கள் இப்படியான கடினமான காலங்களை கடந்து செல்வதற்கு காரணம் எங்கள் குழுவினர்.
எங்கள் குழுவினரை நான் குடும்பம் என்றே அழைக்கிறேன்.

எங்கள் வாழ்நாளில் பெரும்பாலான நேரத்தை அலுவலகத்தில் கழிக்கிறோம்.நாங்கள் 24 மணிநேரத்தில் 8 மணி நேரம் தூங்கு வதற்கும். விழித்திருக்கும் 16 மணிநேரத்தை பொது விடயங்களுக்கு செலவிடுகிறோம். அதில் இரண்டு மணிநேரம் பயணிப்பதற்கும் மீதி 10 மணித்தியாலங்களை அலுவலகத்திற்கும் செலவிடுகிறோம். நாங்கள் குடும்பத்துடன் குறைந்த நேரத்தையே செலவிடுகிறோம். ஆனால் அங்குதான் எம்மீது பற்று அதிகமாக உள்ளது.

விழித்திருக்கும் போது அலுவலகத்தில் அதிகளவு நேரம் செலவிடுகி றோம் ஆனால் அங்கு எங்கள் மீதான பற்று குறைவாக இருக்கும். எனக்கு பதவிகளும். சலுகைகளும் என்னுடன் பணி செய்பவர் களால் தான் கிடைத்துள்ளது. அவர்கள் இல்லை என்றால் நான் இல்லை. அவர்கள் தான் சொத்து. காரணம் அவர்கள் வருமானத்தை உருவாக்குகிறார்கள். செழிப்பை. மகிழ்ச்சியை உருவாக்குகிறார்கள்.

எங்கள் நிறுவனத்தின் வெற்றியின் இரகசியம் எங்கள் குடும்பம். எல்லோரும் சமமானவர்கள். அவர்களின் துயரங்கள் எங்கள் துயரமாக கருதி அவர்களை வழி நடத்துகிறோம்.

இந்த விருதுகள் அனைத்துக்கும் நான் ஒன்றும் செய்யவில்லை. இதையெல்லாம் எனது குடும்ப உறுப்பினர்களே செய்கிறார்கள். அதனால் நான் எனது விருதுகளை குடும்ப (குழுவினர்) உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டேன். ஒரு தலைவராக பணிவாக இருக்க வேண்டும். நீங்கள் பணிவாக இல்லை என்றால் ஒரு முதலாளியாக இருப்பீர்கள். ஒரு முதலாளிக்கும் ஒரு தலைவருக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

சுழற்சி பொருளாதாரம் என்பது தற்போது பிரபலமடைந்து வரும் ஒரு கருத்து. ஆனால் இலங்கையில் எமது மூதாதையர்கள் சுழற்சி பொருளாதார காலத்தில் வாழ்ந்துள்ளார்கள்.அதேபோல் நானும் இந்தக் கருத்துடன் வாழ்ந்து வருகிறேன். நான் பயன்படுத்தும் ஒவ்வொரு வளத்தையும் எனது எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பேன் என்பதை நான் உறுதிசெய்கிறேன். எங்களுடைய பணியை சரியாக செய்தால் நாங்கள் விருதுகளுக்கு தெரிவு செய்யப்படுவோம்.

சிறுவர்கள் மத்தியில் AI மற்றும் இணையத்தில் தீய விடயங்களை நுகரும் பழக்கம் ஆபத்தானதாக காணப்படுகிறது. இந்நிலையில். சிறுவர்களை அவற்றிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு "துரு கபகரு" (Thuru Kepakaru) மர நடுகை திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். எமது மூதாதையர்கள் இயற்கை மீது அன்பு செலுத்தினார்கள். அவர்களால் சமூகத்துக்கு தீங்கு விளைவிக்கப்படவில்லை. அவர்களின் இதயம் மிகவும் மென்மையானதாக இருந்தது. 'துரு கபகரு' நிகழ்ச்சித் திட்டம் பாடசாலை ரீதியாக செயற்படுத்தப்படுகிறது.

என்னுடைய முதலாவது தலைவர் எனது தாய். அவர் எனக்காக நிறைய தியாகங்கள் செய்துள்ளார். எனவே மற்றையவர்களுக்காக அவரது விருப்பங்களை யார் தியாகம் செய்யமுடியுமோ அவரே தலைவர் ஆவார்.


ஒருவர் பிறந்த ஆண்டுகளின்படி. முதலில் பேபி பூமர்ஸ். ஜென் X. ஜென் Y. ஜென் Z. மற்றும் ஜென் Beta என அழைக்க படுகிறார்கள். "ஜென் Z" தலைமுறையினர் தொழில்நுட்ப யுகத்தில் வளர்ந்தவர்கள். எனவே. தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் கவனமாக இருக்க வேண்டும். தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனவே. எதிர்கால குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமாக ஒருவருக்கொருவர் உணர்வுகள் இருப்பதை உணரச்செய்ய வேண்டும். உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். இந்த நாடு முற்றிலும் மரியாதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. எந்த மதத்தவராக இருந்தாலும் அவர்கள் எப்போதும் கட்டமைப்புக்குட்பட்டவர்கள். அதனால் தான் நாம் கட்டுப்படுத்தப்படுகிறோம். எனவே பகுத்தறிவு நல்லது. ஆதனுடன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் அவசியம்.

எங்களிடம் குழாய் பொருத்துநர் குழு ஒன்று உள்ளது. என்வே குழாய் திருத்தம் தொடர்பில் எங்களுக்கு அழைப்பு எடுத்து குழாயை திருத்தி தருமாறு அழைப்புவிடுத்தால். எங்கள் குழுவினர் உரிய இடத்திற்கு செல்வார்கள். அங்கு சென்று பார்வையிட்டதும் எங்களுடைய வர்த்தக நாமம் பொறித்த குழாய் அங்கு பொருத்தப்பட்டிருக்காவிடினும் அவர்களுக்கு சேவைகளை வழங்கி உதவுவார்கள். அவர்களிடம் கட்டணம் அறவிடாமல் இலவசமாகவே செய்து கொடுப்பார்கள்.

இதனை போன்று அனைவரும் செய்தால் இந்த உலகம் மிகவும் அழகாக இருக்கும். ஆப்பிள் நிறுவனத்தால் கூட இதனை செய்வது கடினம். ஆனால் எங்களுடைய வர்த்தக நாமம் செய்து கொடுக்கும்" எனக் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இலவச மருத்துவமுகாம் சபையின் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் தலைமையில் கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கல்வயல் வட்டார உறுப்பினர் இ.யோகநாதனின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகர சபையும், சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாமில் கண், நீரிழிவு மற்றும் பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் இடம்பெற்றன. பார்வையில் குறைபாடு காணப்பட்ட 75 பேருக்கு லயன்ஸ் கழகத்தினர் மூக்குக்கண்ணாடிகள் வழங்கினர். (எ-25,9)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நுணாவில் பொது நூலகத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் விரைவுகணிதப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டன. (எ-25,9)



# மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.24

அளவெட்டி அருணோதய கல்லூரியில் மனைப்பொருளியல் கண்காட்சி கல்லூரி முதல்வர் ஜெயானந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. மாணவர்களின் ஆக்கங்கள், பாரம்பரிய உணவுத் தயாரிப்புகள் என்பன கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் மனைப்பொருளியல் அலகின் தலைவர் திருமதி மேனகா சிவகரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்பப் பாட ஆசிரிய ஆலோசகர் அருந்தவம் மற்றும் மனைப்பொருளியல் அலகின் விரிவுரையாளர்களான முகம்மது சாரிப், டிலக்ஷிகா ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-41-27)



'க்ளீன் சிறிலங்கா' திட்டத்தின்கீழ் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தினால் காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மலசலகூடம் புதிதாக அமைப்பதற்காக ரூபா 2 இலட்சத்து 30 ஆயிரம் பெறுமதியான காசோலை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.24

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் பரிசாரகர் (ஆண் மற்றும் பெண்) தரம் III பதவிக்கு காணப்படும் 25 வெற்றிடங்களுக்குத் திறந்த அடிப்படையில் ஆள் சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.


வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் ஓர் அமர்வில் ஆகக் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றவர்களும், தொழிற்தகைமை மட்டம் 2 அல்லது 3 க்கு (NVQ 2, NVQ 3) குறையாது தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழைப் பதவியுடன் தொடர்புடைய துறையில் பெற்றவர்களும் விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி முன்னர் விண்ணப்பிக்கமுடியும் என்றும் மேலதிக விவரங்களை வடக்கு மாகாணசபை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-66)

## தியாகதீபத்தின் ஒன்பதாவது நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 24

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தலின் ஒன்பதாவது நாள் நிகழ்வுகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் யாழ். நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது சுடரேற்றி, ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து திலீபனின் உருவப் படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலும் திலீபனின் உருவப்படம் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-66)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 05 - 1935



மறைவு 23 - 09 - 2025

### செல்வி கமலநாயகி நாகலிங்கம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை 1ம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், 132 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலநாயகி நாகலிங்கம் அவர்கள் நேற்று (23.09.2025) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மயில்வாகனம், இராஜேஸ்வரி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான E.S பியதாஸ, கமலாதேவி, துரைசிங்கம் மற்றும் அமிர்தசெல்வி ஆகியோரின் மைத்துனியும், றூபினியின் பெரிய தாயாரும், வரதராஜாவின் (மாருதி ரேடிங் சென்ரர், ஸ்ரான்லி வீதி) மாமியாரும், அபிநயா, திவ்யா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-09-2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**132, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/46326) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**074 351 2766**

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 – 04 – 1961



மறைவு 22 – 09 – 2025

அமரர்

### தவராணி மகேஸ்வரன்

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவராணி மகேஸ்வரன் அவர்கள் 22.09.2025 அன்று மாலை இறைபதம் அடைந்தார்.

இவர் காலம் சென்ற கந்தசாமி கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், குரும்சிட்டியைச் சேர்ந்த காலம் சென்ற வேலுப்பிள்ளை சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆதவன், காலம் சென்ற ஆர்த்திகா, மாதவன், காலம் சென்ற ஶ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மூகாம்பிகை, மேலிஷா ஆகியோரின் மாமியாரும், தவராசா, கனகராசா(கனடா), கனகராணி, துவாரகாதேவி (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், மகேஸ்வரி, நாகலட்சுமி (கனடா) காலம் சென்ற பொன்னம்பலம், ராஜ்குமார்(பிரான்ஸ்), சுபாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும்.

காலம் சென்ற மகேந்திரன், காலம் சென்ற மனோன்மணி காலம் சென்ற தவமணி, பராசக்தி, மகாதேவன், காலம் சென்ற சிவசக்தி, செல்லம்மா, பரமேஸ்வரி, மனோகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை 25.10.2025 அன்று காலை ஈமக்கிரியைகள் நடைபெற்று பகல் 12 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

**இல. 145, டச்சு வீதி,**
**சாவகச்சேரி**

**தகவல் - குடும்பத்தினர்**
+94 772911184 / 0772911181/ 0766500521

## INVITATION FOR BIDS
## THUNUKKAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | | From 24.09.2025 until 07.10.2025 | | | | |
| | | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 01.10.2025 | | | | |
| | | Closing and Opening of Bids | | | | At 11.00 A.M on 08.09.2025 | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/WM/01 | Consturction of Waste Collecting Center at Thunukkai PS Head Office | PSDG Fund | 1.27 | 63 | C9 above (Building) | 1500.00 | 09-Dec-2025 | 20,000.00 | 06-Jan-2026 |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00** hrs to **15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table**. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) **S/No from 01 to 04** must be delivered to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 11.00 A.M as stated in table above**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.**
6. Pre-Bid Conference will be held at Conference Hall, **Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.**
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Vellankulam Road,**
**Thunukkai.**

**24.09.2025**

## யாழ்ப்பாணத்தில் தொழிற்சந்தை!

கொழும்பு,செப்.24

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இளைஞர், யுவதிகளுக்காக வேலை வாய்ப்பு தொழிற்சந்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து குறித்த தொழிற்சந்தையை நடத்தின.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்ஹ பங்கேற்றார். தொழிற்சந்தையில் கணக்கியல் துறை, காப்புறுதித் துறை, சந்தைப்படுத்தல் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணினித்துறை பயிற்சிநெறி, தாதியர் பயிற்சிநெறி, ஆடைத்தொழிற்சாலை, பாதுகாப்புச் சேவை, சுப்பர் மார்க்கெட் மற்றும் தனியார் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய துறைகளை சேர்ந்த நிறுவனங்கள் கலந்துகொண்டன.

(ச-20.66)



## திலீபனின் நினைவேந்தலில் நல்லூரில் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், செப்.24

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது நினைவை முன்னிட்டு நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் குருதிக்கொடை முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

"எமக்காக உயிர் கொடுத்தவனுக்காக உதிரம் கொடுப்போம்!" எனும் தொனிப் பொருளில் இந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வு நடைபெற்றது.

(ச-25,66)



துன்னாலை வல்லிபுரம் மாயவர் ஆலயத்தில் கொடியேற்றத் திருவிழா கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.
(எ-25.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.09.2025
புதன்கிழமை

புதன் பொய்கை

பூரணி

# திலீபன் இன்னும் தீராப் பசியுடன்!



உலகில் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட வடிவங்களில் அகிம்சை வழி, ஆயுத வழி இரண்டுமே மிக முக்கியமானவை. ஆயுதப் போராட்டத்தில் பெருமளவு உயிரிழப்புகள், உடமை இழப்புகள் நிகழ்ந்தேறுகின்றன.

இதனால் அகிம்சை வழிப் பெறுகைகள் மிகவும் ஆரோக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அகிம்சை வழிப் போராட்டங்களின் மூலம் சுதந்திரம் பெற்ற நாடுகளாக இந்தியா (1947), கானா (1957) போன்றவற்றைக் குறிப்பிடலாம். வன்முறையற்ற அகிம்சை வழியின் மூலம் உலகில் சுதந்திரம் பெற்ற மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். இதனால்தான் இந்தியாவின் தேசத் தந்தையான மகாத்மாகாந்தி அகிம்சையின் அடையாளம் என மதிக்கப்படுகிறார். இப்படியான காந்தி தேசத்தினர் தமிழீழத்தில் அகிம்சை வழிப் போராளி ஒருவரின் சாவுக்கு முற்று முழுதான காரணமாயினர் என்பது கறைபடிந்த மறுக்கமுடியாத உண்மை.

இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து பெரும்பான்மையின சிங்கள அரசு சிறுபான்மைத் தமிழினத்தின் நிலம், மொழி, கல்வி, வேலைவாய்ப்பு போன்ற உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. ஆரம்பத்தில் அகிம்சை வழி மூலம் தமிழ்த் தலைவர்கள் போராடியும் பயனற்றுப் போனது. இதனால் 1980களின் முன்னும் பின்னுமாக இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பல விடுதலை அமைப்புகள் செயற்பட்டிருந்தன. எனினும் ஒழுக்கம் கட்டுப்பாடு நிறைந்த விடுதலைப் புலிகள் அமைப்பே ஆயுதப் போராட்டத்தை தனித்து தொடர்ந்தும் இறுதிவரை முன்னெடுத்த பெரும் சக்தியாக விளங்கியது. இதற்கு அவர்களின் ஈகமும், தற்கொடையும், ஆற்றலுமே காரணங்களுமாகும். யுத்த காலங்களில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர், தமிழர் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டன, இராணுவத்தால் மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்பட்டன. யுத்தத்தின் போது அரச பொருளாதார தடைக்கு எதிராகப் புலிகளின் சிறந்த சுயசார்புப் பொருளாதாரக் கட்டமைப்புகள் மூலம் மக்களின் அத்திவாசிய தேவைகள் நிறைவேற்றப்பட்டன. 1983ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் உள்ளீர்க்கப்பட்ட திலீபன் எனும் திடமான போராளியின் ஆரம்பிப்பும், வளர்ப்பும், வழிகாட்டலும் இதற்குக் காரணம் என்றால் மிகையாகாது. ஆம் திலீபன் அமைப்பினது அடித்தளப் பெருந்தூண்களில் ஒருவராவார்.

## ஒப்பற்ற கற்கையாளன்

ஊரெழு மைந்தன் பார்த்தீபன் சிறந்த கற்கையாளன். தாயற்ற நிலையில் தந்தையாரால் ஆளாக்கப்பட்டவன். மருத்துவக் கற்கைக்குத் தெரிவான போதும் மறுத்து மண் விடுதலைக்காக தனது சுகங்கள், தேவைகளைத் துறந்தவன். 18ஆவது வயதில் இணைந்த பார்த்தீபன் அன்றிலிருந்து திலீபனானான். தலைவரினதும் கேணல் கிட்டுவினதும் பேரன்புக்கும் பெரும் நம்பிக்கைக்கும் பாத்திரமானான். அனைத்து போராளிகளும் அவனில் அதீத பற்றுக் கொண்டிருந்தார்கள். மக்கள் தமது உறவாக, பிள்ளையாக நேசித்தனர். உறக்கமற்ற கண்களுடன் கலைந்த தலைமுடியும் நெடிதுயர் தோற்றமும் கட்டமிட்ட சேட்டும் கையில் நடைபேசியும் திலீபனது அடையாளங்களாகும். அவனது தெளிவான, திடம்மிக்க, புகழ்பெற்ற "கோட்டைப்" பேச்சு இப்போதும் விசுவாசிகளின் காதுகளில் ஒலிக்கிறது. ஆயுதப் போரொன்றில் ஆறு அங்குல குடலை இழந்த திலீபன் எப்போதும் உடல் அவஸ்தைகளைக் காட்டிக் கொள்வதில்லை. அன்றைய காலத்தில் அமைப்புக்குள்ளேயோ, வெளியிலேயோ பிரச்சினைகள் சிக்கல்கள் இருந்தால் அங்கு திலீபன் இருப்பான். சுமூகமாகத் தீர்வும் அளிப்பான். அவனின் கருத்துக்கு மக்களிடம் அவ்வளவு நம்பிக்கையும் மதிப்பும் இருந்தது. 1980ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் கேணல் கிட்டுவின் அனுசரணையுடன் மக்கள் மத்தியில் வினைத்திறன்மிக்க கட்டமைப்புகளான விழிப்புக் குழுக்கள், இணக்க சபைகள், கிராமிய நீதிமன்றுகள், ஒலி ஒளி கட்டுப்பாட்டுச் சேவைகள், பொருண்மிய மேம்பாட்டு அமைப்பு, தொழிற்சங்கங்கள், தமிழர் கலாசார நிறுவனங்கள் போன்றவற்றையும் அமைப்பின் பலப்படுத்தலுக்காக மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, நாட்டுப் பற்றாளர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் போன்றவற்றையும் திலீபன் நிறுவி வழிநடத்தினான். தேசவிடுதலையுடன் சமூக விடுதலைக்காகவும் உழைத்தான்.

## அஹிம்சைத் தீ

காலத்துக்குக் காலம் நடந்த யுத்தங்களின் பின்னராக ஏற்படுத்தப்படும் அரசு விடுதலை அமைப்பு பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவடைவதுதான் வழமை. 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கப்டன் மில்லரின் தாக்குதலை அடுத்து வந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இதன்படி 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி புலிகளின் ஆயுதங்கள் பலாலியில் ஒப்படைக்கப்பட்டன. இந்தநிலையில் வடக்கு கிழக்கில் பரவிய இந்திய அமைதிப்படையினர் ஒட்டுக்குழுக்களின் உதவியுடன் அராஜகங்களைப் புரிந்தனர். மக்கள் சொல்லொனாத் துயரை அனுபவித்தனர். எந்தவித பயனுமற்ற நிலையில் காந்திய தேசத்துக்கு உண்ணாவிரதம் மூலம் அகிம்சை வழியில் உணர்த்த முனைந்த திலீபனுக்கு தலைவர் அனுமதியும் வழங்கினார். அமைப்பின் உயிரான உறவுகள், பொது மக்கள் புடைசூழ தமிழீழத் தாயொருவரின் விபுதிப் பூச்சு ஆசீர்வதிப்புடன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூர்க்கந்தன் ஆலய வடக்கு வீதியில் காலை 9.45 மணிக்கு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும், தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும், இடைக்கால அரசு அமைக்கப்படும்வரை புனர்வாழ்வு என்ற பெயரில் நடத்தும் சகல வேலைகளையும் நிறுத்த வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறப்பது உடன் நிறுத்தப்பட வேண்டும், ஊர்காவல் படைகளின் ஆயுதங்கள் மீளப்பெறல் வேண்டும் எனும் ஐந்து கோரிக்கைகளையும் முன் வைத்து நீரும் அருந்தாமல் தன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தான்.

சொட்டு நீரும் அருந்தாது 12 நாட்களாக நீதி கேட்டு தன்வயிற்றில் பசித் தீ வளர்த்த திலீபனின் கோரிக்கைகளுக்கு இந்திய அரசு இறுதி வரை செவிசாய்க்கவில்லை. 365 மணித்திலாயங்கள் தியாகப் பயணத்தின் முடிவாக 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி காலை 10.48 மணிக்கு தனது மூச்சை நிறுத்தி நேசித்த மக்களிடம் இருந்து விடைபெற்று தமிழீழக் காற்றுடன் கலந்தான். தமிழர் பிரதேசம் எங்கணும் கண்ணீரில் மூழ்கியது. நம்பிக்கை வைத்த மக்கள் இந்திய தேசத்தின் மாயையைப் புரிந்து கொண்டனர். 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும். விண்ணில் மற்றைய மாவீரர்களுடன் 651ஆவது நட்சத்திரமாக இணைந்து அதனைப் பார்த்திருப்பேன்' என்ற திலீபன், விடியலை எதிர்பார்த்து இன்னமும் தீராப் பசியுடன்தான் இருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொதுக்கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயல்முறையின் படிப்பினைகள்

பகுதி: VIII



**பூங்கோதை இரத்தினவடிவேல்,**
பிரதிப் பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை' எனும் தொனிப்பொருளில் கடந்த யூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து முக்கியமானதொரு மாநாட்டை நடத்தியிருந்தன. இதில் பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களில் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களை தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத் தொகுதி அமைந்துள்ளது. அந்த வகையில் இந்தத் தொடரில் அமைந்த நான்காவது கட்டுரையாக இது அமைந்துள்ளது.

அந்த வகையில், 'நம்பகத்தன்மைக்கான பாதை: ஆளுகை பற்றிய கரிசனைகள் தொடர்பாக இலங்கை என்ன செய்கிறது?' என்ற தலைப்பில் நடைபெற்ற அமர்வின் முக்கியமான அம்சங்களை சுருக்கமாக வழங்குகிறது. இந்த அமர்வை சர்வதேச நாணய நிதியத்தின் சட்டத்திணைக்களத் துணைப் பிரிவுத்தலைவர் ஜோயல் டர்க்விட்ஸ் தொகுத்து வழங்கினார்.

இலங்கை சமீபத்திய ஆண்டுகளில் கடுமையான சமூகப் பொருளாதாரச் சவால்களுக்கு முகங் கொடுத்தது. இந்த நெருக்கடியானது, அதிகரித்த பொதுக்கடன், தாழ்ந்த வரி வருமானம், தொடர்ச்சியான வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறை, பொருத்தமற்ற பொருளாதார கொள்கைகள் மற்றும் தாமதமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் போன்ற நீண்டகால தொடர்ச்சியான சவால்களில் இருந்து தோற்றம் பெற்றிருந்தது. அதுமட்டுமல்லாது, சமீபத்திய பொருளாதார நெருக்கடியானது நாட்டின் ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பு தொடர்பிலான ஆழமான மற்றும் அமைப்பு சார்ந்த பலவீனங்களையும் சவால்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஆளுகை என்பது ஒரு நாடு அல்லது அமைப்பு எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது மற்றும் எவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதைக் குறிக்கும், அதே நேரத்தில் நம்பகத்தன்மை என்பது குடிமக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் உலகளாவிய பங்காளர்கள் இந்த நிறுவனங்களின் முடிவுகள் மற்றும் செயற்றிறனில் வைக்கும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. பொறுப்புக்கூறல் என்பது அதிகாரிகள் தங்கள் செயல்களுக்கும் பொது வளங்களைப் பயன்படுத்திய விதத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்தை உறுதி செய்கிறது. இம் மூன்று கோட்பாடுகளும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் அரசியல் நிலைத்தன்மையை பேணுவதற்கும் அடிப்படையாக அமைகின்றன. நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் மூலம் வலுப்படுத்தப்படும் நல்லாளுகை, வெளிப்படைத்தன்மையை முன்னெடுத்து நிலையான கொள்கை அமுலாக்கத்தை உறுதிப்படுத்துகின்றது. மேலும், இது ஊழல் தடுப்பில் முக்கிய பங்கு வகித்து, பொதுமக்கள் மற்றும் சர்வதேச பங்காளர்களின் நம்பிக்கையை தக்கவைக்க உதவுகின்றது.


சமீபத்திய பொருளாதார நெருக்கடி இலங்கையின் நீண்டகால ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பு தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிர்வாகப் பலவீனங்களை சரிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைப்பாட்டை கட்டாயமாக்கியது. சிக்கலான பொருளாதார நெருக்கடிக்குப் பதிலளிக்கும் விதமாக, தொடர்பான அதிகாரிகள் பல முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களைச் செயல்படுத்தி, நாட்டை நிலையான மீட்சி ப்பாதையில் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினர். மீட்சிப் பாதையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இருந்த போதிலும், முற்றாகச் சரிசெய்யப்பட வேண்டிய பல சவால்களை இன்னமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்தச் சவால்கள் சீரான அபிவிருத்தியை தாமதப்படுத்தவும் நீண்டகால வளர்ச்சியை பாதிக்கவும் கூடிய அதிக வாய்ப்புகளுள்ளன. குறிப்பாக பரவலாகக் காணப்படும் ஆளுகை மற்றும் ஊழல் தொடர்பிலான கரிசனைகள் வரி சேகரிப்பு, முதலீடு மற்றும் கடன் வழங்கலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தப் பிரச்சினைகளைச் சீர்செய்ய வேண்டியதானது கடினமாக ஈட்டிய பொருளாதார முன்னேற்றங்களை பாதுகாப்பதற்கும் நீண்டகால அபிவிருத்தியை அடைவதற்கும் அத்தியாவசியமாகக் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்கான பதிலிறுத்தலில் நல்லாளுகை ஒரு முக்கிய அங்கமாகியுள்ளது. நல்லாளுகை தொடர்பான குறைபாடுகள், குறிப்பாக ஊழல் மற்றும் பலவீனமான நிறுவனங்களை சரிசெய்யாமல் இருந்தல் போன்றன, அடையப்பட்ட மீட்சியின் பலன்களை பலவீனமாகவும் குறுகிய காலத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாகவும் மாற்றிவிடும். இப் புரிதலின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் ஆளுகை மற்றும் ஊழல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தல் முக்கியமான தூண்களில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டது.

இந்த நிதிய வசதியின் கீழ் ஆளுகை மற்றும் ஊழல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தல் தொடர்பில் நாடு பூர்த்திசெய்ய வேண்டிய முக்கிய கட்டமைப்புசரா் இலக்குகளாக நிறுவனங்களின் சுயாதீனத்தையும் ஊழல் தடுப்பையும் உறுதி செய்யும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் மற்றும் இலங்கையின் ஊழலுக்கெதிரான கட்டமைப்பினை மதிப்பிடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவிக்குழுவினால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைக்கான ஆளுகை கண்டறிதல் அறிக்கையினை வெளியிடல் என்பன காணப்படுகின்றன.

மேலும், இத் திட்டத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் ஊழலை எதிர்த்தல், அரச துறையின் வெளிப்ப டைத்தன்மையை உறுதி செய்தல், அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் வரி சேகரிப்பு மற்றும் செலவின முகா மைத்துவத்துக்கான டிஜிட்டல் மயமாக்கலை துரிதப்படுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

(மிகுதி அடுத்தவாரம்)



## தமிழுக்காய் உயிர் தந்தவன்

இனத்தின் விடியலில் அவன் தன் உயிர் விதைத்து
பசும் வெளிச்சம் முழமாகும் புனலின் கனவில்
திலீபன் என்ற பெயர் வெறும் வார்த்தையல்ல
அது தியாகத்தின் வேதனை

மௌனமாக மலர்ந்த ஓர் நிழல்
மனதை நொறுக்கும் நினைவின் குரல்
அது வெறும் பெயரல்ல உள்ளத்தில் எழும்
ஓர் தீபத்தின் ஆவி தீராத வெளிச்சம்

வானமும் நடுங்கும் இரவும்
விழிகளில் தூய்மை தேடும் காதலும்
பாதைகளின் ஒளியும் குரலில் மொழியும்
அசையாமல் நிலைத்தது அவன் உறுதியிலே

மண்ணின் மீது சாயாமல் எழுந்த
மக்களின் நம்பிக்கைக்கு தீபமாயிருந்தவன்
பசியைத் தாங்கி பாரத்தை ஏந்தி
பரிதியின் துளியில் போராடிய மாவீரன்

அவன் உணர்வுகள் அலை பாய்ந்தன
அழுக்காறுகளின் கடலில் நம்பிக்கை தோன்றியது
இருள் சூழ்ந்த வேளையில் இனத்தின் ஏக்கம்
புனிதமாய் நிமிர்ந்தது

பசுமை மண்ணின் பாசத்துக்கு ஓர் ஓரம் இல்லை – அவன்
பாதையில் மடிந்து போன சாயமும் அழியவில்லை
உயிர் கொடுத்தோர் பலர் இருந்தும்
உண்ணாமை ஒன்றால் உலகத்தை கண்ணீராக்கியவன்


யாழ் பல்கலையில் மருத்துவம் படித்தவன்
மண் மீது தீராக் காதல் கொண்டவன்
தமிழுக்காய் உயிர் தந்தவன்
விடிவுக்காய் உயிராக வந்தவன்

ஈராறு தினங்கள் உணவொறுத்து துயில் தொலைத்து
இன்னுயிரை ஈகம் செய்துஎம்மவர் நெஞ்சில் என்றுமே
அணையாத தீபமாய் சுடர்விடும் அண்ணண் திலீபன்
என்றுமே எங்களின் ஒப்பற்ற தலைவனே....

விணோதினி விஜயரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைந்தமிழின் பாசமைந்தன்



தியாகத்தின் மகுடத்தில் முகிழ்த்த
மானிடப் பெறுமதிகள் கடந்த
உணர்ச்சிப் பெருக்கின்
உன்னத மனோதிடம்
சக மானிடத்தின்
விடிவை வேண்டும் வேட்கை
உயிரிலும் மேலாக
பயிராகி செழித்த
சத்திய வேள்வியில் சுடர்ந்த
ஈடிணையற்ற ஒறுப்பின் ஓர்மம்....!

நீதியின்இருப்பை
கொடிய நினைவுகளால்
கருவறுத்து அமைதிப் பறவையை
அக்கிரமக் கூட்டிலடைத்து
பட்டினியை பரிசளித்த
அநீதியில் குளித்த பாரதத்துக்கு
மானிட மாண்பை
தன்னுயிரில் தியாக வரிகளால்
வரைந்து காட்டிய வற்றாத
ஈகையின் ஊற்று...!

தன்னை சத்திய வழியில்
ஈந்து பசித்தீயின்
நாக்குகள் உதிர்த்த
அக்கினிக் குழம்பை
குளிர் அருவியாய் கொண்டாடி
விடுதலை நீராடி
வாழ்வை அர்பணித்த
வள்ளண்மையின் உயிர்வடிவம்..!

திருமேனியின் ஒவ்வொரு
அணுவையும்
தன் இனத்துக்காய்
அர்ப்பணித்த மானிட
உரிமைகளின் தார்ப்பரியத்தை
உண்ணா நோன்பினால்
தமிழ் மண்ணோடு கலந்து
மௌனமாய் மனிதத்துக்கு
விழிப்பூட்டி வழிகாட்டிய
திலீபன் எனும்
பைந்தமிழின் பாசமைந்தன்

- ஆனையூர்க்கவிராயர்

# ஈழத்தின் ஜோதி



ஈழத்தின் பெருமை திலீபனவனே
மாணிக்கக் கோயிலடா
ஈழத்தாயின் கோயிலிலே அவன்
கோபுரக் கலசமடா

ஐந்து அம்சக்கோரிக்கை ஆகுதியாய் கொண்டே
அகிம்சை வேள்வி செய்தானடா
சிந்தை மேனி ஊற்றுப் பெருக்காய்
நல்லை வீதி அலையாய் ஆனதடா

நல்லையம்பதியில் நாளும் அவனே
கற்பூர தீபமடா
ஒலிக்கும் மந்திரமெலாம் அதிலே
நாதமேயானாயடா

பண்ணி கலந்த இராகத்திலெல்லாம்
சுருதியே யானாயடா
மழலை வாயின் சொல்லிலெல்லாம்
பாகாய் கலந்தாயடா

அகிம்சாயுதத்தால் அகிலமறியப்
பொன் எழுத்தானாயடா
காந்தி பிறந்த இந்தியாவையே
தலைகுனிய வைத்தாயடா

நாடும் தமிழும் கண்ணெனக்கொண்டு
வேங்கையானாயடா
வாரி இறைத்த தமிழ் ஒலியெலாம்
விண்ணில் எதிரொலித்தாயடா

ஒன்றே சக்தி என்றே இணைந்தால்
தமிழ்வெல்லும் என்றாயடா
இன்றே என்றும் வரம் தந்தான்
உறுதிகொள்வாயடா

காலம் மாறும் கோலம் மாறும்
கொள்கை ஒன்றேயடா
ஈழம் மலர்ந்திடு வானத்திலே அவன்
இலட்சிய ஜோதியடா

திருமதி பவானி

# பழமொழிகள் பேசமறந்த பெண்ணியம்

சண்சியா வரதராசன்

பெண் இன்றி பெருமையும் இல்லை, கண் இன்றி காட்சியும் இல்லை என்பார்கள்'. ஒரு சமூகத்தின் அடிப்படை தூண்களாக பெண்களே காணப்படுகின்றனர். ஆனால் பெண்களைப் பற்றிய சமூகப் பார்வை என்பது இன்றளவும் பெண்ணியத்தை மௌனிக்கச் செய்வதாகவே உள்ளது. இதனால்தான் பெண்களின் பெறுமதி மிக்க ஆளுமைகளும், ஆசைகளும் அடுப்பங்கரைக்குள்ளேயே முடங்கிப்போய்க் கொண்டிருக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கையாளப்பட்டு வரும் பழமொழிகளில் பெண்களின் நிலை, மற்றும் அவர்களின் பங்கு என்பவற்றை அறிந்து கொள்வதற்காக கள ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தேன். அங்கு சேகரித்த பழமொழிகளில் பெண்கள் சித்திரிக்கப்பட்ட விதமும், பெண்கள் பற்றிய சிந்தனைகளும் ஆணாதிக்கத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டின.



உதாரணமாக பெண்ணாய்ப் பிறப்பதிலும் மண்ணாய்ப் பிறக்கலாம், பெண்ணாய்ப் பிறப்பதும் பாவம்; பெண்ணோடு கூடிப்பிறப்பதுவும் பாவம், பெண்ணைப் பெற்றுக் கெட்டுப் போகாதே, பெண் புத்தி பின் புத்தி, கொண்டு வந்தால் மகாராசி இல்லாவிட்டால் பரதேசி போன்ற பழமொழிகள் பெண்கள் சமுதாயத்தில் எவ்வளவு அடிமைத்தனத்தை எதிர்கொண்டனர் எதிர்கொள்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு, பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும் என்ற பழமொழிகள் பெண்களின் தோற்றத்தின் மீது கட்டுப்பாட்டை திணிப்பதாகவும் உள்ளன. அடித்தாலும் புருஷன்; அணைத்தாலும் புருஷன், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், கணவனே கண்கண்ட தெய்வம் போன்ற பழமொழிகள் பெண்கள் கணவனையே சார்ந்திருக்க வேண்டும் என்பதையும் ஆண் இல்லாமல் பெண்ணுக்கு வாழ்க்கை இல்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே, அரசனை நம்பி புருஷனை கைவிட்டாளாம், பொம்பிளை சிரிச்சா போச்சு புகையிலை விரிஞ்சா போச்சு, சேலை கட்டிய மாதரை நம்பாதே, பெண்டுகள் இருந்த இடம் சண்டைகள் பெருத்த இடம் என்ற பழமொழிகள் பெண்களின் நடத்தைகளை குறை கூறுவதற்காகக் கையாளப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிந்தது.

மலடி அறிவாளா பிள்ளையின் பெருமை, மலடிக்குத் தெரியுமா பிரசவ வேதனை என்னும் பழமொழிகள் குழந்தைப் பாக்கியம் கிடைக்காமைக்கு பெண்ணை மட்டும் காரணங்காட்டி அவளை இழிவு படுத்துவனவாக உள்ளன. குழந்தையைப் பெற்றெடுப்பதே பெண்ணின் கடமையென்றும் பிள்ளைப்பேறு இல்லாத பெண்கள் பயனற்றவர்களென்றும் சமுதாயம் கருதுவதை இதன் மூலம் அவதானிக்க முடிகிறது.

ஆனால் இத்தகைய பழமொழிகள் ஆரம்பத்தில் பெண்களின் பெருமை, ஆளுமை என்பவற்றை வெளிக் காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் காலப்போக்கில் சமூகத்தின் சில ஆணாதிக்க சிந்தனைகளுக்கும், பெண்ணியத்திற்கு எதிரான போக்கிற்குள்ளும் ஆட்பட்டு பெண்ணியத்திற்கு எதிரான பழமொழிகளாக திரிபடைந்து கையாளபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் பழமொழிகள் ஒரு சமூகத்தின் அனுபவக் குறிப்புகளாக பார்க்கப்படுகின்றன. கால ச் சூழ்நிலைகளுக்கேற்ப பழமொழிகள் திரிபடைந்த போதிலும் சமூகத்தின் உயிர் நாடியாகத் திகழும் பெண்களை மாறுபட்ட சிந்தனைப் போக்கோடு பார்க்காமல் சமூக யதார்த்தத்தோடு ஒப்பிட்டு பார்க்கையில் சமூகத்தில் இன்றளவும் நிலை கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆணாதிக்க சிந்தனையும் பெண்ணியத்தின் பெருமை பாராட்டத் தொடங்கும். அடுப்பங்கரைக்குள் அகப்பட்டு, ஆணாதிக்கத்துக்குள் முடங்கி, இன்றளவும் தன் இயல்புநிலை மறந்து, ஈன்ற வேதனையும் துறந்து, உலகை உயிர்ப்படையச் செய்த மங்கையின் பெருமை தான் இன்றளவும் பேசப்படாத பெண்ணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்தார். விஷ்ணுராஜ் ஜதுர்மன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவரா வார்.

குளித்துவிட்டு வந்து மின்னழுத்தியைப் பயன்படுத்தியபோதே, மின்னொழுக்குக் காரணமாக அந்த இளைஞருக்கு மின் சாரம் தாக்கியுள்ளது. இதையடுத்து, அவர் உடனடியாக மீட்கப்பட்டு தெல்லிப் பழை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர் கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பின்னர், சடலம் உடற்கூற்றுப் பரிசோத னைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசா ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-100-40)

## சர்வதேசத்திடம்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையில் தற்போது காணாமல் ஆக்கப் பட்டோர் தொடர்பில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்ன ணியில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போதும், அதற்கு முன் னரும் காணாமல் ஆக்கப்பட்டவர்க ளுக்கு நீதிகோரியும், தமிழர்களுக்கான தீர்வை வலியுறுத்தியும் சுழற்சி முறை யில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் இரவு - பகலாக எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 4 மணிவரை இந் தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. எனவே, தமிழ் மக்கள் பெருவாரியாக இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் - என்றனர். (அ-ம-20-26-66)

## குடலில்...

சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முத்து சசிகுமார் (வயது-40) என்ற குடும் பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவரா வார்.

கடந்த 21ஆம் திகதி அந்த நபர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மருத்துவமனைப் பரிசோதனைகளின்போது, குடலில் கிரு மித் தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத் தப்பட்டது. இந்த நிலையில், சிகிச்சையின் போது நேற்று அவர் உயிரிழந்துள்ளார். சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோத னைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வாள்வெட்டுச்...

யில் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப் பாணம் - கொக்குவில் பகுதியைச் சேர்ந்த அந்த நபர், நீண்டகாலமாகத் தலை மறைவாக இருந்த நிலையில் பொலி ஸார் அவரைத் தேடி வந்தனர். இந்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலை யத்தின் ஊடாக நாட்டைவிட்டுத் தப்பி யோட முற்பட்ட நிலையில் நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. (அ-ம-27)

## போர்க்...

தேவை என்று ஐக்கிய நாடுகள் சபை யின் வதிவிடப் பிரதிநிதியிடம் நேற்று நேரில் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற் றங்களுக்கு சர்வதேச நீதி கோரியும், மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வ தேச கண்காணிப்பையும், விசாரணை யையும் வலியுறுத்தியும் தமிழர் தாயகத் தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட் டில் அண்மையில் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தக் கையொப்பங்களுடனான மனு, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரேயிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவ கட்சியின் செயலாளர் நாயகம் சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளரான குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். இதன்போதே, அவர்கள் சர்வதேச விசாரணையை வலி யுறுத்தினார்கள். (அ-ம-20-26-66)

## பிறந்த...

சிசுக்களே இவ்வாறு உயிரிழந்துள்ளன. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## 70,000...

அரச சேவையில் சுமார் 70 ஆயிரம் ஊழியர்களை இணைத்துக் கொள்வதற் கான அமைச்சரவை அனுமதி கிடைத் துள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:-

அரச சேவையில் தற்போது பல்வேறு துறைகளில் வெற்றிடங்கள் காணப்படு கின்றன. குறிப்பாக, சுகாதாரத்துறை யில் கணிசமான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற் காக, 70 ஆயிரம் அரச ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது. அதற் கான நடவடிக்கை கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

ஆளணிப் பற்றாக்குறை யால், சுகாதார சேவையில் நெருக்கடிகள் உள்ளபோதும் அவற்றைக் கருத்தில் கொள் ளாது நோயாளர்க ளின் நலனக ளைப் பிரதான மாகக்கொண்டு சுகாதார ஊழியர் கள் அர்ப்பணிப்பு டன் செயற்படுகின் றனர். எனவே, இந்த நெருக்கடிக ளைப் போக்கும் விதமாக அடுத்த இரு மாதங்களில் வெற்றிடங்களை நிரப்பும் செயற்திட் டங்களை முன் னெடுக்கவுள் ளோம். அத்துடன், தாதியர் வெற்றி டங்களும் நிரப்பப் படவுள்ளன - என் றார். (அ-ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 09 . 1949

மறைவு 23 . 09 . 2025

### திருமதி குணபாலன் இந்திராதேவி

(சின்ன டீச்சர்)

கைதடி நாவற்குழியை பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, நந்தாவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணபாலன் இந்திராதேவி அவர்கள் நேற்று (23.09.2025) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சிவசோதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாமாக்கா (சிங்கப்பூர் - நாமாக்கா) தம்பதியரின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை குணபாலன் (பேபி) அவர்களின் பாசமிகு துணைவியாரும், இராசமணி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சர்மினி (பபி) இன் அன்புத் தாயாரும், கணேஸ்வரன் சதீஸ் (PHI - Tutar) இன் அன்பு மாமியாரும், சந்திரன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சற்குணம் (பொறியியலாளர் - UK), சரோஜினி (அவுஸ்திரேலியா), உத்தமகுணம் (பொறியியலாளர் - UK), நற்குணம் (பொறியியலாளர் - UK) ஆகியோரின் பாசமிகு அண்ணியாரும், நிர்மலா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற ஜராங்கனி (UK), பத்மநாதன் (அவுஸ்திரேலியா), பிரேமினி (UK), மலர் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜேந்திரமணி - ஞானேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம்), ருஷ்யேந்திரமணி - சங்கரப்பிள்ளை (ஆசிரியர் - ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் பாடசாலை), ருபேர்திரமணி - பாலமுகுந்தன் (UK) ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், கௌரி குடும்பம் (டென்மார்க்), இரவீந்தரின் குடும்பம் (பாபு- டென்மார்க்), சந்திரகுமார் குடும்பம் (UK), சிவகுமார் குடும்பம் (கனடா), ஸ்ரீப்பிரியா குடும்பம் (UK) ஆகியோரின் அன்புச் சின்னமாமியும், சங்கீர்த்தா (JSAC - நிதி உத்தியோகத்தர்), சதுர்ஷிகா (Lecturer - ICBT), சம்யுக்தா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அபராஜிதன் - கார்த்திகா (அமெரிக்கா), பவதாரணி (யாழ். தேசிய கல்வியற் கல்லூரி), மயூரஹறிஷ் (UK) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2025) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

077 2618 267
071 6820 667
077 9075 753

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஷ்வபிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



### குணரத்தினம் சுகுமார்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சுகுமார் அவர்கள் கடந்த (22.09.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் - கமலாதேவி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சிவகுரு - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமதி மற்றும் மஞ்சுளா தேவி அவர்களின் பாசமிகு கணவரும், காருன்ஜா, ரிசிகேசன், பிரியதர்சினி, திலிப்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரகுமார், ராம்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.09.2025) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

87 பத்திரகாளி கோவிலடி
வண்ணார்பண்ணை

தகவல்:
குடும்பத்தினர்.
077 435 9434 மனைவி
075 847 56758 மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும், விரைவில் சரியாகிவிடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச் சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வெளியூரில் இருந்துவரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் செலவு செய்வீர்கள். திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பவிஷயமாக வெளியூர்ப் பயணம்மேற் கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு மனக்கசப்புகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.



# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆவரங்கால் இந்து வாகை

யாழ்ப்பாணம், செப்.24

யாழ்ப்பாணம் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 2025ஆம் ஆண்டுக்கான மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. இதன் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தனராக யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறை மற்றும் மோகனதாஸ் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர்கள், கழக உறுப்பினர்கள், விளையாட்டுவீரர்கள், பிரதேசமக்கள், நலன் விரும்பிகள், கரப்பந்தாட்ட ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41-27)

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப்.24

சக்தி வழிபாடுகளில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் நவராத்திரி தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி தினம்தோறும் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடம்பெற்றுவருகிறது. (ச-25.100)

***


யாழ்ப்பாணம், செப்.24

சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்களின் ஏற்பாட்டில் வாராந்தத் "திருவிளையாடல் " புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் இடம்பெறும். "ஈழத்துச் சமயப் பெரியார்கள்" குருபூஜை விழாவும் அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் விஷேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும் "வல்லமை தாராயோ" எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ.த. குமரனின் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.24

சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்களின் ஏற்பாட்டில் வாராந்தத்திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குரு பூஜை விழாவும் அடங்கிய நவராத்திரி விழாத் தொடர்-2 தெல்லிப்பழை மாவைக்கலட்டி அருள் மிகு நாகதம்பிரான்தேவஸ்தானத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. விஷேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும், 'கும்ப பூஜை மகிமை' எனும் விடயப் பொருளில் சைவப்புலவர் பிரசங்கபூஷணம் கந்த சத்தியதாசனின் சொற்பொழிவும் இடம் பெற்று, அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)



# 'திலீபனின் வாழ்வியல்' வினாவிடை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.24

தியாக தீபம் திலீபனின் வாழ்வியலை எமது இளம் தலைமுறையினருக்குக் கொண்டு செல்லும் நோக்குடன் தியாகதீபம் திலீபன் ஆவணக் காப்பகத்தினரால் தொகுக்கப்பட்ட 'தியாகதீபம் திலீபனின் வாழ்வியல்' எனும் பெயரிலான வினாவிடைத் தொகுப்பு அடங்கிய நூல் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பங்கேற்று வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து இந்த நூலை 18 வயதுக்குட்பட்ட இளையோர்கள் ஆவணக் காட்சியகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

# பெரும்படை அம்மன் ஆலயத்தில் திருவிளையாடல் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.24

கைதடி நாவற்குழி தெற்கு அருள் மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவிளை[illegible]ழிவுத் தொடர் - 24 நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். சைவப்புல[illegible]ங்க பூஷணம் கந்த சத்திய தாசன் "அங்கம் வெட்டின படலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை


16 Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1250/- Germany - 1930/- Canada - 2470/-
France - 1930/- Australia - 2050/-
திருமுருகன் கொம் நெற்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
0777 55 45 28
DHL
கிளைகள்:- கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

# வடகொரியாவைப் போன்று இலங்கையை மாற்ற முயற்சி

## அரசு மீது சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.24

இலங்கையில் வடகொரியாவின் நிலைமையை தோற்றுவிப்பதற்கு ஆளுங்கட்சி முயற்சித்து வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே அடக்குமுறை தலைதூக்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனநாயகத்தை மதிக்கும் கட்சி என்ற வகையிலேயே எமது கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் பங்கேற்றது. கட்சியின் சார்பில் செயலாளர் என்ற அடிப்படையில் நான் பங்கேற்றிருந்தேன். எமது கட்சிக்குரிய தனித்துவங்கள் மற்றும் கொள்கைகளை பாதுகாத்தபடியே நாம் பயணிக்கின்றோம். ஆயினும் நாட்டில் ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பலகட்சி முறைமையை இல்லாதொழித்து, எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்களை ஒடுக்கி, வடகொரியாவில் போன்று ஜனநாயகம் அற்ற சூழ்நிலையை இங்கு ஏற்படுத்துவதற்கு முயற்சி இடம்பெறுகின்றது. அதன் ஓர் அங்கமாகவே அடக்குமுறை தலைவிரித்தாடுகின்றது. தமது கட்சி அலுவலகத்தில் இருந்தவர்களை பொலிஸுக்கு நியமித்து, தமது தேவைக்கேற்ப பொலிஸாரை பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர்.

எனவேதான் ஜனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கில் எதிரணிகள் ஒன்றுபட்டுள்ளன - என்றார். (எ-44)

வேலையாட்கள் தேவை
கோவில் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பற்சிகிச்சை நிலையத்திற்கு A/L படித்த பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :-
076 789 8983
(CS/59467) J-1

Pool Coach தேவை
பலாலி வீதியில் அமைந்துள்ள Sports Club இற்கு Pool game தெரிந்த Coach ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு:-
076 090 3346, 077 985 3501
(CS/59466) J-1

# ஜே.வி.பி.யின் கடந்தகாலங்கள் நேரம்வரும்போது வெளிவரும்

## எச்சரிக்கின்றார் துமிந்த



கொழும்பு, செப்.24

நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகளில் கொள்ளையடித்து, மின்பிறப் பாக்கிகளுக்கு தீவைத்து, பாடசாலைகளை உடைத்து, நெல்களஞ்சியசாலைகளை தீக்கிரையாக்கி 1980களில் மக்கள் விடுதலை முன்னணி செய்த மனிதப்படுகொலைகளை பட்டியலிட்டால் அவற்றை வெளிப்படுத்த காலம் போதாது. ஆனால் காலம் வரும்போது நிச்சயம் அவை தொடர்பில் வெளிப்படுத்துவோம் என்று முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எதிர்க்கட்சியிலிருந்தபோது கூறிய விடயங்களை ஆட்சியமைத்த பின்னர் நிறைவேற்ற முடியாது என அமைச்சர் லால் காந்த குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறுபவர்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் எவ்வாறு மக்களிடம் சென்று வாக்கு கேட்க முடியும்?

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானாலும், ஐக்கிய தேசிய கட்சியானாலும் எதிர்க்கட்சியாக இருக்கும்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆட்சியமைத்த பின்னர் நிறைவேற்றியிருக்கின்றோம். ஜே.வி.பியைப் போன்று மக்களை ஏமாற்றவில்லை. பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியது முதல் நாம் நிறைவேற்றிய வாக்குறுதிகள் நீண்ட பட்டியலாகும்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, கடும் எதிர்ப்பை வெளியிட்டு அதை இடைநிறுத்தியது ஜே.வி.பியே. அதனால் எமக்கு 500 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. தற்போது மீண்டும் அந்த வேலைத்திட்டத்துக்கு இவர்களாலேயே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த குழுவினரிடமே 64 இலட்சம் மக்கள் மாற்றத்தைக் கோரினர். ஆனால் அந்த மாற்றம் ஒருபோதும் சாத்தியப்படாது - என்றார். (எ-இ)

TECHNO WORLD
A/L தொழில்நுட்பக் கல்லூரி
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது
A/L 2025 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய
விசேட செயலமர்வு
27,28,29 September 2025
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30,01,02 October 2025
பொறியியல் தொழில்நுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
03,04,05 October 2025
ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்
காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை
இடம் :- வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346
(CR/46099)JK

காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு
சுதுமலை DC Lane புதிதாக அமைக்கப்பட்ட வீடு 4 அறைகள், 3 வரவேற்பு அறைகள், 1 சமையலறை 2 1/2 பரப்பு காணியில் அமைந்துள்ளது.
உடனடியாக விற்பனைக்கு உண்டு.
விலை - 180,00000/-
(ஒரு கோடி 80 லட்சம்)
FREE

24.09.2025 தொடக்கம் 03.10.2025 வரை வாங்குபவர்களுக்கு என்றோ 860000/- பெறுமதியான மோட்டார் சைக்கிள் புதிதாக வாங்கித்தரப்படும்.
தொடர்புகளுக்கு:-
075 508 3325, 076 536 9321
(CS/59465) J-1

## திலீபனின்...

தாயகத்தில் ஊர்திப்பவனி இடம்பெற்று வருகின்றது. இந்தப் பவனி நேற்று பருத்தித்துறையைச் சென்றடைந்தது. இதன்போது பருத்தித்துறை நகர முதல்வர் வின்சன் டி போல் டக்ளஸ் போல், வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் உணர்வுபூர்வமாக மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்த ஊர்தி, பருத்தித்துறை நகர சுற்றுவட்ட வீதியூடாகப் பயணித்து நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு முன்பாக நிறுத்த முற்பட்டபோது அங்கிருந்த ஒருவர் பட்டாசுகளைக் கொளுத்தி ஊர்திக்கு முன்பாக வீசியுள்ளார். இதன்போது, பருத்தித்துறை நகரசபை தவிசாளர் தனது பாதணியால் பட்டாசுக் கோர்வையை மிதித்து, அதைத் தொடர்ந்து வெடிக்காமல் பார்த்துக் கொண்டதுடன், இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவித்தார். இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார், பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் அந்த நபரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மது போதையில் இருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.